*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*10 10 2025 FRIDAY 6.30 PM*
*மாநிலச் செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *உடல்நலனை சீராக பராமரிப்பதில் மனநலம் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

- *மருத்துவ ஆராய்ச்சியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

- *கிட்னி முறைகேடு தொடர்பான வழக்கில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை பிறப்பித்த உத்தரவை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது*

- *வடகிழக்குப் பருவமழை வரும் 16ஆம் தேதியிலிருந்து 18ஆம் தேதிக்குள் தொடங்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

- *உலக பாரா வலு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் வினெய் தங்கப்பதக்கம் வென்றார்.*

>>>>><<<<<

*உடல்நலனை சீராக பராமரிப்பதில் மனநலம் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சர்வதேச மனநல தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*மனநலம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இந்த துறையைச் சேர்ந்தவர்கள் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்றும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.*

>>>>><<<<<

*மருத்துவ ஆராய்ச்சியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.*

வேலூர் மாவட்டம், பாகாயத்தில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சர்வதேச மரபணு குறித்த இரண்டுநாள் கருத்தரங்கை இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்து உரையாற்றினார்.

கோவிட் பாதிப்பு காலத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பு மருந்துகள், நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, ஆராய்ச்சி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் தேவையான அளவுக்கு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இன்று நாகையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு எடுத்துச் செல்லுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாதந்தோறும் மின் கணக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்படும் என்ற வாக்குறுதியை திமுக அரசு இதுவரை நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் மின்கட்டணத்தை உயர்த்தியதாக கூறியுள்ளார்.

மின் உற்பத்தியை பெருக்கவும் திமுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தனியாரிடமிருந்து மின்சாரத்தை வாங்கி அதற்கான நிதிச் சுமையையும் மக்கள் மீது திமுக அரசு ஏற்றியுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

கிட்னி முறைகேடு தொடர்பான வழக்கில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை பிறப்பித்த உத்தரவை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இதுதொடர்பான தமிழக அரசின் மேல்முறையீட்டு மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, *Nilay Vipinchandra Anjaria* அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

சிறப்பு புலனாய்வுக் குழுவில் இடம்பெற்றுள்ள அதிகாரிகளை, மாற்ற அனுமதிக்குமாறு தமிழக அரசு விடுத்த கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்தனர்.

பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்கு தடை விதிக்கவும் இந்த அமர்வு மறுத்துவிட்டது.

>>>>><<<<<

வடகிழக்குப் பருவமழை வரும் 16ஆம் தேதியிலிருந்து 18ஆம் தேதிக்குள் தொடங்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 46 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையிலிருந்து கூடுதல் உபரி நீர், தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்படுவதால், கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் 30 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

உலக விண்வெளி வார விழாவை ஒட்டி, நாமக்கல் மாவட்டம், பாச்சலில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடைபெற்றன.

இது பள்ளி மாணவர்களிடையே பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – கண்ணன் 35 செகண்ட்ஸ்)

விண்வெளி தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு இந்த கண்காட்சி தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருந்ததாக இதனை பார்வையிட்ட மாணவிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 46 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

சேலத்திலிருந்து ஏற்காடு - கொல்லிமலைக்கான பேருந்து சேவையை மாநில அமைச்சர்கள் திரு. ஏ.வ.வேலு மற்றும் திரு. ராஜேந்திரன் இன்று தொடங்கி வைத்தனர்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் இன்று அடிக்கல் நாட்டினார்.

>>>>><<<<<

தென்காசியில் புகையில்லா இளைய சமுதாயம் என்னும் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரத்ததான முகாம் அமைப்பாளர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று வழங்கினார்.

>>>>><<<<<

திருப்பூர் மாவட்டம், உடுமலை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைப்பதற்கான வல்லுநர் குழு, இன்று அந்த ஆலையில் ஆய்வு மேற்கொண்டது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா வலு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் வினெய் தங்கப்பதக்கம் வென்றார்.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஜூனியர் 72 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

உலக ஜூனியர் கலப்புக் குழு பேட்மிண்டன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – இந்தோனேஷியாவிடம் தோல்வியடைந்தது.

இதன்மூலம் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

இப்போட்டியில் முதல்முறையாக இந்தியா பதக்கத்தை வென்றுள்ளது.

>>>>><<<<<

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் Yashasvi Jaiswal சதம் அடித்தார்.

புதுதில்லியில் இன்று தொடங்கிய இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா, முதல் இன்னிங்ஸில் ஆட்ட நேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 318 ரன் எடுத்துள்ளது.

Yashasvi Jaiswal அபாரமாக ஆடி 173 ரன்னுடனும், சுப்மன் கில் 20 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

>>>>><<<<<

சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tasnim Mir காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 15-8, 20-18 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் Insyirah Khan-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹித் - Riduvarshini இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

ஜப்பான் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

*Jinan* சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Arjun Kadhe – Rithvik Bollipalli* இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

*ARCTIC* ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Anmol Kharb* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>END<<<<<